MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 30.08.2019 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 550 | **மன்றப்பொருள் எண். 01**<br><br>பொது சுகாதாரம்- நகராட்சி உரக்கிடங்கில் Biominingமற்றும் FSTP பணிகள் நடைபெறுவதால் ஏற்பட்டள்ள இட நெருக்கடியின் காரணமாக நகரின்அனைத்து வார்டுகளில இருந்து அடிக்கடி நிரம்பி விடுகிறது. அவற்றை சமன்படுத்தி மேலும் கொட்டுவதற்கு இடமாக்க வேண்டியுள்ளது. எனவே ஏற்கனவே பணி செய்துள்ள மணிக்கு ரூ.1000+500 தினப்படி என்ற விலை விகிதத்திற்கு மிகாமல் பணியினை செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு- பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 551 | **மன்றப்பொருள் எண். 02**<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் கடித ந.க.எண்.17464/2018/UPA1 நாள் 03.07.2019ல் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நலிவுற்ற குடும்பங்கள் கணக்கெடுப்பு செய்து ஏற்கனவே பதிவேற்றம் செய்த விபரங்களை சரிபார்த்து | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | விடுபட்டுள்ள விபரங்களை சேகரித்து மீண்டும் கணிணியில் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பணி ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக உள்ளதாலும் அவசர அவசியம் கருதியும் ஏற்கனவே நகர்மன்ற தீர்மா எண்.505 நாள்.08.03.2019 ன்படி ஒப்புதல் பெறப்பட்ட படிவம் ஒன்றுக்கு ரூ.6 என்ற விலை விகிதத்தில் ஏற்கனவே பணிசெய்த தேவா கார்ட்ஸ் ஆப்செட் பிரிண்டர்ஸ், மதுரை நிறுவனம் மூலம் பதிவேற்றம் செய்யும் நடவடிக்கைக்கும், அதற்கானதோராய செலவினம் ரூ.32000/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக்குறிப்பு -மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண். 234/2019/எச்1 | |
| 552 | **மன்றப்பொருள் எண். 03**<br><br>மேலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் 2015, 2016, 2017 2018 ஆகிய நான்கு வருடங்கள் தொகுக்கப்படாமல் உள்ளது. பிறப்பு பதிவேடு ஒரு வருடத்திற்கு 12 வால்யூம் வீதம் நான்கு வருடத்திற்கு 48 வால்யூம் பைண்டிங் செய்யும் வீதம் 4 வால்யூம் பைண்டிங் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.10000 க்கு மன்றத்தின் அனுமதிகோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு-மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1698/2019/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 553 | **மன்றப்பொருள் எண். 04** | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்காக தற்போது வாங்கப்பட்டள்ள 4LCV TATA ACE வாகனங்களுக்கு கீழ்க்காணும் உபகரணங்கள் வாங்கி பொருத்தப்பட வேண்டியுள்ளது.<br>1. IEC மைக் செட்டுடன் – 4 Nos<br>2. பம்பர் - 4 Nos<br>3. வண்டிக்களுக்கான Spreading Mat -4 Nos<br>4. ஹாரன்-4 Nos<br>மேற்கண்ட உபகரணங்களை வாங்கி பொருத்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>554</td><td>மன்றப்பொருள் எண். 05<br><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகராட்சி விதி 15ன் கீழ் டிசம்பர் 2018 முதல் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்றுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>வ.எண்.</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு</td></tr>
<tr><td>1</td><td>முத்தமிழ் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி</td><td>ரூ.9.60இலட்சம்</td></tr>
<tr><td></td><td>இந்நகராட்சிக்குத் தேவையான 5 HP, 1.5HP ஆழ்துளை மோட்டார் மற்றும் கேபிள் விநியோகிக்கும் பணி</td><td>ரூ.8.50இலட்சம்</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>இந்நகராட்சி திருச்சி, மதுரை மெயின் ரோட்டில் குடிநீர் பகிர்மானக் குழாய் மற்றும் பிரதான குழாய் அமைக்கும் பணி</td><td>ரூ.2.50இலட்சம்</td></tr>
<tr><td></td><td>இந்நகராட்சிக்கு தேவையான குடிநீர் விநியோகப்பொருட்கள் பேனர்போர்டு மற்றும் மின்சாதனப்பொருட்கள் விநியோகிக்கும் பணி</td><td>ரூ.9.90இலட்சம்</td></tr>
<tr><td></td><td>நகராட்சி பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளை பராமரித்து மராமத்து செய்யும் பணி.</td><td>ரூ.3.80இலட்சம்</td></tr>
<tr><td></td><td>நகராட்சி மூன்று பள்ளிகளுக்கு டேபிள் சேர் மற்ம் பீரோக்கள் விநியோகம் செய்யும் பணி</td><td>ரூ.9.98இலட்சம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு- பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>555</td>
<td>மன்றப்பொருள் எண். 06<br><br>இந்நகராட்சியில் உள்ள கணினி,பிரிண்டர், வலைத்தளம் மற்றும் இணையதள சேவைகளை 2018-19 ஆண்டு பராமரிப்பு பணி சக்தி கம்ப்யூட்டர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியை 2019-20ம் ஆண்டிற்கு பராமரிப்பு செய்ய மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தத்தை புதுபிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம். | |
| 556 | **மன்றப்பொருள் எண். 07**<br><br>இந்நகராட்சியில் உள்ள கணிணி பிரிண்டர், வலைத்தளம் மற்றும் இணையத்தள சேவைகளை பராமரிக்கும் பணிக்கு 2019-20ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 557 | **மன்றப்பொருள் எண். 08**<br>மேலூர் நரகாட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் உள்ள கீழ்க்காணும் காலியாக உள்ள கடைகளுக்கு 21.05.2018, 04.09.2018, 04.10.2018,26.10.2018,14.11.2018, 30.01.2019,15.02.2019,01.03.2019,20.03.2019 மற்றும் 16.07.2019 ஆகிய தேதிகளில் பொது ஏலத்துடன் கூடிய அறிவிப்புகள் கோரியும் எவரும் கலந்துகொள்ளவில்லை. எனவே கடைகளுக்கான முன்வைப்புத்தொகையை குறைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. காநதிஜி பூங்கா ரோடு<br>வளாக கடை எண்.24,25,10,17,18,20,29,30,31,மற்றும் 32<br>2. கோட்டை கிணறு தெரு<br>வளாக கடை எண்.5,6,7 மற்றும் 8<br>3. மேலத்தெரு வணிக வளாக முதல் தளம்<br>மேற்காணும் கடைகளுக்கு டேவணித்தொகை ரூ.35000 சொத்துமதிப்பு சான்று | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ரூ.1,00,000/-சொத்துமதிப்பு சான்று இல்லையெனில் கூடுதல் வேடவணித்தொகை ரூ.20,000/- சொத்துமதிப்பு சான்று ரூ.50000 சொத்து மதிப்புசான்று இல்லையெனில் கூடுதல் டேவணித்தொகை ரூ.50,000 என குறைத்து நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு- இந்நகராட்சி வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு கடந்த ஓராண்டிற்கும் மேலாக பொதுஏல அறிவிப்புகள் வெளியிட்டும் எவரும் கலந்து கொள்ளாத காரணத்தினால் இக்கடைகளுக்கான முன்வைப்புத்தொக மற்றும் டேவணித்தொகையினை குறைத்ததை அனுமதித்தும் ஏலம் கோர யாரும் முன்வராத காரணத்தினால் நகராட்சி வசம் மேற்படி கடைகள் இருந்த காலத்திற்கு ஏற்படும் இழப்பினை இழப்பெனக் கருதாமல் இருக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.340/2018/அ2) | |
| 558 | **மன்றப்பொருள் எண். 09**<br><br>மேலூர் நகராட்சி பேருந்து நிலைய உணவகத்திற்கான 16.07.2019ம் தேதிய பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை வீடியோ மூலம் பதிவு செய்வதற்கு கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>1. \| நிலா டிஜிட்டல் ஸ்டுடியோ &வீடியோ 14, நகராட்சி வளாகம் சந்தைப்பேட்டை மேலூர் \| ரூ.8,000/- | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2.</td><td>முத்து ஸ்டுடியோ & வீடியோ<br>திருச்சி மெயின் ரோடு<br>மேலூர்</td><td>ரூ.9,000/-</td></tr>
<tr><td>3.</td><td>கார்த்திக் ஸ்டுடியோ & வீடியோ<br>மதுரை திருச்சி மெயின் ரோடு<br>மேலூர்</td><td>ரூ.8,500/-</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு<br>வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள நிலா டிஜிட்டல் ஸ்டுடியோ & வீடியோ நிறுவனம் மூலம் பணி மேற்கொண்டமைக்கும், அதற்கான தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2768/2018/அ2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>559</td>
<td>மன்றப்பொருள் எண். 10<br><br>இந்நகராட்சி அலுவலகம் பின்புறம் தினசரி சந்தை செல்லும் வழியில் புதிதாக கட்டப்பட்டுள்ள (On line compost yard) போக மீதமுள்ள 525 சதுரடி இடத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு பூங்கா அமைத்து பராமரித்துக் கொள்ளவும், சுத்தமாகவும் , சுகாதாரமாகவும் இடத்தை பராமரித்துக் கொள்ளவும் மாத வாடகை ரூ.750/- க்கு திருமதி.கே.மகாலெட்சுமி க/பெ கர்ணன் என்பவருக்கு 01.01.2019 முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. தற்சமயம் மேற்படி கே.மகாலெட்சுமி என்பவர் தன்னால் அந்த இடத்தை பராமரிக்க இயலாத காரணத்தினல் அன்னாரது உரிமத்தினை ரத்துசெய்ய வேண்டுமாறு விண்ணப்பம் அளித்துள்ளார்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>எனவே அன்னாரது விண்ணப்பத்தினை ஏற்று 01.08.2019 முதல் அன்னாரது உரிமத்தினை ரத்துசெய்யவும், கேட்பினை கணினியிலிருந்து நீக்கம் செய்து, அன்னார் செலுத்த வேண்டிய வாடகை நிலுவையை அவர் பெயரில் உள்ள வைப்புத்தொகையில் இருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2116/2018/அ2)</td>
<td></td>
</tr>
<tr>
<td>560</td>
<td>மன்றப்பொருள் எண். 11<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பணிகளுக்கு கிருமிநாசினிகள் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி 31.07.2019 அன்று கோரப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>வ.எண்.</td><td>நிறுவனம்</td><td>நீர்த்த சுண்ணாம்புத்தூள் 10000 கிலோ</td><td>பிளீச்சிங் பவுடர் 2000 கிலோ</td></tr>
<tr><td>1</td><td>ஜி.வி.ஏஜென்சீஸ், மதுரை</td><td>ரூ.92000</td><td>ரூ.92000</td></tr>
<tr><td>2</td><td>விகாஸ், ஏஜென்சீஸ், மதுரை</td><td>ரூ.102000</td><td>ரூ.96000</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

அலுவலகக்குறிப்பு-
குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் காணும் ஜி.வி.ஏஜென்சீஸ், மதுரை நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண்.1458/2019/எச்1)

561

**மன்றப்பொருள் எண். 12**

அனுமதிக்கப்பட்டது

இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு மற்றும் இதர கொசுக்களால் பரவும் நோய்களைத் தடுப்தற்கான புகைமருந்து இயந்திரம் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி 31.07.2019 அன்ற கோரப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனம் | Vehicle mounted fogging machine ரூ. | Pulse fog portable ரூ. |
|---|---|---|---|
| 1 | எஸ்.என்.எண்டர்பிரைசஸ், சென்னை-87 | ரூ.275000 | ரூ.73000 |
| 2 | சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங், சென்னை-89 | ரூ.267000 | ரூ.72600 |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு-
குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.2ல் காணும் சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங், சென்னை-89, நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், பணிஉத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| | (கோப்பு எண்.1456/2019/எச்1) | |
| 562 | **மன்றப்பொருள் எண். 13**<br><br>மேலூர் நகராட்சி பேருந்துநிலைய உணவகம் தொடர்பாக திரு.ஏ.பி.இளங்கோ என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண்.W.P.(MD)No.23224/2018ல் 07.08.2019 அன்று நகராட்சி சார்பாக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு.கே. செல்லப்பாண்டியன் அவர்கள் ஆஜரானமைக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/- வழங்கக்கோரி கடிதம் அனுப்பியுள்ளார். அன்னாருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2768/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 563 | **மன்றப்பொருள் எண். 14**<br><br>மேலூர் நகராட்சி அலுவலக தேவைக்கான A4 பேப்பர் 50 ரீம் அவசர அவசியம் கருதி J.P.புக்பைண்டிங் & பிரிண்ட்டிங் ஒர்க்ஸ், மேலூர் நிறுவனத்திடம் இருந்து வாங்கியமைக்கான தொகை ரூ.11,180/- ஐ மேற்படி நிறுவனத்தின் உரிமதாரர் திரு.S.ரவிச்சந்திரன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.38/2012/D2) | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 564 | **மன்றப்பொருள்- 15**<br>இந்நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர்,பேருந்து நிலைய காவலர், மற்றும் இரவு காவலர் பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள தகுதியான விண்ணப்பங்களை பெற வேண்டி பொதுமக்கள் அறியும் வண்ணம் மக்கள் தொடர்பு அலுவலர் மாவட்டஆட்சியர் அலுவலகம் மதுரை அவர்கள் வழி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 565 | **மன்றப்பொருள்- 16**<br>இந்நகராட்சியின் அனைத்து பிரிவுகளிலும் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுதுபொருட்கள்,படிவங்கள் மற்றும் பதிவேடுகள் 2019-2020 ஆண்டிற்கு அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கவும் அதற்கான உத்தேசசெலவினம் ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு- அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் நிறுவனத்தின் மூலம் வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 566 | **மன்றப்பொருள் எண்.17**<br>1.Resolved that Melur Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs.274.63 lakh (Rupees Two hundred and seventy four lakh and sixty three | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>thousand only) from TUFIDCO for ‘Provision of internal plumbing for HSC(Minimum 8000 nos) for optimum utilization of water supply at Melur Municipality under Revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.<br><br>2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other document if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Melur Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Melur Municipality.<br><br>3. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.<br><br>4. Resolved to adhere to time line as envisaged DPR.<br><br>5. Resolved that Melur Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Melur Municipality’s annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.<br><br>6. Resolved that Melur Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for water supply in favour of TUFIDCO till the repayment of loan.</td>
<td></td>
</tr>
<tr>
<td>567</td>
<td>மன்றப்பொருள் எண்.18<br>தமிழ் நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு சாலைகள் சீரமைப்பு திட்டம் (TURIP) 2019-20ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு கருத்துரு அனுப்ப மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிவுரையின் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்து ரூ.200.00 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>தொகை(ரூ. இலட்சத்தில்</td></tr>
<tr><td>1.</td><td>வார்டு 5, பி.பி.எல்,டவர் பகுதி வார்டு 8 பாலமுருகன்கோவில் பின்புறம் , வார்டு 11, சொக்கம்பட்டி குறுக்குத்தெரு, வார்டு 16, காந்தி நகர் மற்றும் எஸ்.எம்.நகர், வார்டு 18, திருவள்ளுவர் நகர், வார்டு 16, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பின்புறம் ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி</td><td>ரூ.200.00</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு- மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(கோப்பு எண்.1807/2019/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>568</td>
<td>மன்றப்பொருள் எண்.19<br>
தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பைகளை அரைத்து உரம் தயாரிக்க புதிதாக வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட உள்ள இரண்டு Shredder machine –களை நகராட்சி அலுவலகத்தில் இயக்குவதற்கு தேவையான வயங் வேலைகளை செய்வதற்கும், அதற்கு தேவையான மின்சாதனப் பொருட்களை வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.45000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்<br>
கோப்பு எண். 1686/2019/இ1</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

தனிஅலுலர் மற்றும் ஆணையாளர்( பொ),
மேலூர் நகராட்சி.